O.S. 97/2023

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:04.03.2025

PW1:குருசாமி த/பெ– திருஞானம்

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் தற்போது சாத்தூர் நத்தத்துப்பட்டி கிராமத்தில் தான் வசித்து வருகிறேன். முகவரி மாற்றம் எதுவுமில்லை. நான் சொந்தமாக 160 ஆடுகளை வைத்து மேய்க்கும் தொழில் செய்து வருகிறேன். இது போக வேறு தொழில் செய்யவில்லை. எனக்கு சொந்தமாக ஒரு காரை வீடு உள்ளது. எனக்கு திருமணமாகி குழந்தைகள் இல்லை. எனக்கு ஆடு மேய்க்கும் தொழில் மூலம் மாதம் சுமார் வருமானம் ரூ.50,000/- வரும். எனக்க வங்கி கணக்கு எதுவும் உண்டா என்றால் இல்லை. தபால் வங்கி கணக்கு எதுவும் இல்லை. பிரதிவாதியை கிருஷ்ணன் என்பவருடன் நீதிமன்றத்தில் வைத்து நான் பார்த்தேன். கிருஷ்ணனும், நானும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள், ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர்கள். உறவினர்கள் இல்லை. அவர் சாத்தூர் நீதிமன்றத்தில் பணி செய்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். அவர் தான் என்னை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்துள்ளார் என்றால் சரியல்ல, அது பற்றி எனக்கு தெரியாது. அவர் தெரிந்தவர் என்பதால் அவரிடம் சொல்லி பணத்தை திருப்பி கொடுக்க சொல்ல சொன்னேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதியை நான் எத்தனை முறை யார் முன்னிலையில் பார்த்தேன் என்று பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் 10 முறைக்கு மேல் பார்த்துள்ளேன். பிரதிவாதி என்னிடம் எதற்கான பணம் வாங்கினார் என்றால் வீட்டு விஷேசத்திற்காகவும், சில்லரை கடனிற்காகவும் கடன் வாங்கினார்.

மேற்படி விபரத்தை வழக்கறிஞர் அறிவிப்பிலோ, பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் சொல்லியுள்ளேன். நான் நிரூபண வாக்குமூலத்தில் அது போல் சொல்லவில்லை என்றால் எனக்கு படித்து பார்க்க தெரியாது. பொதுவாக சரியாக அறிமுகம் இல்லாத நபர் பெரிய தொகை கடனாக கேட்டால் கொடுக்க மாட்டோம் என்றால் சரிதான். பிரதிவாதி சேத்தூரை சேர்ந்தவர். அவருக்கு சாத்தூரில் உள்ள நபர்களை தெரியாது என்றால் தெரியும், பிரதிவாதி வெளியூரை சேர்ந்தவர் என்பதால் அவரை எனக்கு தெரியாது என்று சொன்னால் கிருஷ்ணன் என்பவர் மூலம் பழக்கம். தாவா கடனுக்கு முன்பு பிரதிவாதி என்னிடம் கடன் பெற்றுள்ளாரா என்றால் ரூ.50 ஆயிரம் பெற்று திருப்பி செலுத்திவிட்டார். மேற்படி தொகை ரூ.50 ஆயிரம் பெறும் போது பிரதிவாதியிடம் நான் ஆதரவாக காசோலையோ, புரோநோட்டோ வாங்கவில்லை. தாவா கடனுக்கு முன்பு பிரதிவாதி என்னிடம் எத்தனை முறை நேரில் வந்து கேட்டார் என்றால் போன் மூலமாக ஒரு வாரத்திற்கு முன்னர் கேட்டார். மேற்படி விபரத்தை பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் சொல்லியுள்ளேன். தொகை வாங்கும் போது யார் யார் பிரதிவாதியுடன் வந்தார்கள் என்றால் ஜெயக்குமார், முத்துபாண்டியும் வந்தார்கள். ஜெயக்குமார், முத்துபாண்டி எந்த ஊரைச்சேர்ந்தவர்கள் என்றால் எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள். அவர்களுடன் எனக்கு பழக்கம் இல்லை. எனக்கு படிப்பு இல்லை, கையெழுத்து போட தெரியும். புரோநோட்டை பிரதிவாதி சொல்லி முத்துபாண்டி என்பவர் எழுதினார். புரோநோட்டில் தொகையையும், வட்டியையும் பிரதிவாதி சொல்லி தான் எழுதினார். நான் வட்டிக்காக தொகை கொடுக்கவில்லை. பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் அசலை மட்டும்

கொடுத்தால் போதும் என்று சொல்லவில்லை. நான் குட்டி என்பவரிடம் சுமார் 75 ஆடுகளை ரூ.4,80,000/-த்திற்கு விற்றேன். நான் 500 ரூபாய் தாள்களாக 10 கட்டுகள் பிரதிவாதியிடம் கொடுத்தேன். தரகர் குட்டி என்பர் அழைத்து வந்த கேரளாக்காரர் 500 ரூபாய் தாள்களாக 10 கட்டுகள் என்னிடம் கொடுத்தார். குட்டி என்பவரை அழைத்து விசாரித்தால் உண்மை தெரியவரும் என்றால் சரிதான். பிரதிவாதியின் கணவர், தகப்பனார் பெயர் எனக்கு தெரியாது. அவருக்கு ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் குழந்தைகள் உண்டு. பிரதிவாதி சேத்துாரில் எத்தனை வருடங்களாக குடியிருந்து வருகிறார் என்று எனக்கு தெரியாது, நீதிமன்றத்தில் வேலை பார்ப்பதாக மட்டும் தெரியும். நீதிமன்றத்தில் எத்தனை ஆண்டுகளாக பணியாற்றி வருகிறார் என்று எனக்கு தெரியாது, சாத்துாரில் வேலை பார்க்கும் போது பழக்கம். பிரதிவாதி அரசு ஊழியர் என்பது கிருஷ்ணன் என்பவர் சொல்லி அழைத்து வந்ததால் தெரியும். வா.சா.ஆ.1 ல் உள்ள முத்திரைவில்லையில் உள்ள கையெழுத்து யாருடையது என்று கேட்டால் பிரதிவாதியின் கையெழுத்து. பிரதிவாதியின் நீதிமன்ற ஆவணங்களில் உள்ள கையெழுத்துக்கள் மற்றும் அவருடைய வங்கி ஆவணங்களில் உள்ள கையெழுத்துடன் ஒப்பிட்டு பார்த்தால் புரோநோட்டில் உள்ள கையெழுத்து அவருடையது தான் என்பது தெரியவரும் என்றால் சரிதான். மேற்படி புரோநோட்டில் உள்ள பிரதிவாதியின் கையெழுத்தை கைரேகை நிபுணரிடம் அனுப்பி ஒப்பிட்டு பார்த்தால் உண்மை தெரியவரும் என்றால் சரிதான். கைரேகை நிபுணருக்கு அனுப்புவதற்கு நான் தயாராக உள்ளேன். சாட்சி ஜெயக்குமார் தகப்பனார் பெயர் முத்து பெருமாள். புரோநோட்டில் உள்ள வாசகங்கள் எழுத்திற்கும், முத்துபாண்டி கையெழுத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி கிருஷ்ணன் என்பவரிடம் ரூ.80,000/- பணம் பெற்றிருந்தார் என்றும், அதற்கு ஆதரவாக

வெற்று புரோநோட்டில் கையொப்பம் இட்டு கொடுத்திருந்தார் என்றும், அந்த தொகையை ஆகஸ்ட் 2021 ல் மேற்படி தொகையினை திருப்பி செலுத்திவிட்டதாகவும், புரோநோட்டினை தேடி பார்த்து எடுத்துதருவதாக சொல்லிவிட்டு அதை திருப்பி கொடுக்காமல் மோசடியாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி தொகையை பிரதிவாதி திருப்பி கொடுக்கும் போது பிரதிவாதியின் தாய் மாமா ரவி மற்றும் பாலமுருகன் இருந்தனர் என்றும் சொன்னால் சரியல்ல. கடந்த 19.09.2021 ல் மேற்படி புரோநோட்டை கேட்டும், தவறும்பட்சத்தில் வழக்கு தாக்கல் செய்வதாக கூறி அறிவிப்பு அனுப்பினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த பிரச்சனைக்கு இடையே தான் நான் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் பிரதிவாதி என்னிடம் தொகை வாங்க வேண்டிய அவசியமில்லை என்றும், நான் சொன்னது போல் பிரதிவாதி வீட்டில் எந்த விசேஷமும் நடக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அவர் அரசு பணியில் இருப்பதால் அவருக்கு கிடைக்கும் ஊதியமே அவருக்கு போதுமானது என்றும், அறிமுகம் இல்லாத என்னிடம் மேற்படி கடன் தொகை பெற தேவையில்லை என்றும், வழக்கிற்கு முன்பே ரூ.80,000/- கடன் பெற்றதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் என்னால் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றும், நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.